# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**விசாரணை நாள் 10.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 3719-E-2024**

Mr A.Varadaiah .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர், .. பொது அதிகார அமைப்பு
நில அளவை மற்றும்
நில பதிவேடுகள் இயக்ககம்,
2வது தளம், காமராஜர் சாலை, சேப்பாக்கம்,
சென்னை - 600 005

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | Mr A.Varadaiah ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | பொதுத் தகவல் அலுவலர் சார்பாக நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தின் உதவியாளர் திரு மு.கிருபா ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 27.11.2023 |
| **கோரிய தகவல்**:- சென்னை மாவட்டம், திருவற்றியூர் தாலுகா சர்வே எண்.231ஏ தொடர்பான எஸ்.எல்ஆர் நகல்களை சான்றோப்பமிட்டு வழங்குமாறு கோரியுள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்படவில்லை |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 02.01.2024 |
| சட்டப்பிரிவு 18(1)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 13.02.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் நில அளவை மற்றும் நில பதிவேடுகள் இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவுக்கும், சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் மேல்முறையீட்டு அலுவலர் / நில அளவை மற்றும் நில பதிவேடுகள் இயக்ககத்தின் கூடுதல் இயக்குநருக்கு அனுப்பிய முதலாம் மேல்முறையீட்டு மனுவுக்கும், தனக்கு பதில் ஏதும் வழங்கப்படவில்லையென தெரிவித்து, 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் திருவொற்றியூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோருக்கு 02.07.2026 அன்று கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவித்து, அக்கடிதங்களின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்தபோது, மனுதாரர் 27.1.2023 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக மனுதாரருக்கு தகவல் வழங்க நில அளவை மற்றும் நில பதிவேடுகள் இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலர் இதுவரையில் எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமல், 02.07.2026 அன்றுதான் இது குறித்து, சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் திருவொற்றியூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பியுள்ளார் என்பதும். அக்கடிதங்களில், மனுதாரர் கோரிய தகவல்கள் தங்களது பராமரிப்பில் இல்லை என்றும் ஆகவே அத்தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு ஏதுவாக, உடனடியாக தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென கோரியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

5) விசாரணையின் முடிவில், ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **மனுதாரர் 27.1.2023 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக இது நாள் வரையில், எவ்வித தகவலும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. இந்நிலையில், மனுதாரர் கோரிய தகவல்களை, சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் திருவொற்றியூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோரிடமிருந்து பெற்று, அதை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 20.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென, நில அளவை மற்றும் நில பதிவேடுகள் இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

i. **மேலும், மனுதாரர் 27.1.2023 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக, இரண்டரை ஆண்டுகளாக எவ்வித தகவலும் மனுதாரருக்கு**

**வழங்கப்படவில்லை என்பதையும், 02.07.2026 அன்று தான் இது குறித்து, சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் திருவொற்றியூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு தகவல் கோரப்பட்டுள்ளது என்பதையும் ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே, <u>கடந்த இரண்டரை ஆண்டுகளாக மனுதாரருக்கு தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்</u> யார் என்பதை சென்னை, சேப்பாக்கம் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தின் கூடுதல் இயக்குநர் கண்டறிந்து கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று 20.08.2026 அன்று இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் வழக்கு எண் SA 5781-E-2024</u>**

<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்,
சர்வே இல்லம் சேப்பாக்கம்,
சென்னை - 600 005

கூடுதல் இயக்குநர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்,
சர்வே இல்லம் சேப்பாக்கம், சென்னை - 600 005

Mr A.Varadaiah ,
2-77/3. Gurunagar Colony.
Chitoor – 517 001
Andhra Pradesh

Copy to: File
CR/PA